# மணநாள் வாழ்த்து!

**திரு உ__.ஷே. தாஹிர் பாஷா-திருமதி ஷகீலா பேகம்**

**05-01-2023**

வல்லவன் இறைவன் அருளால்;
வையத்துள் வாழ்வை எய்தி,
நல்லவை அல்லவை எனவாய்,
அனுதினமும் பலவும் கொண்டு;
மெல்லியலாள் தன்னை மண்ணில்,
கைத்தலம் பற்றிய நன்னாள்!
தொல்லையில் அன்பில் தோய்ந்து;
தொடர்ந்த நல்இல்லற வாழ்வில்,

வல்லவராய் இரண்டு மக்கள்,
வளமாகப் பெற்று வளர்த்தீர்!
கள்ளமில் சிரிப்பைக் காண,
கனிவுடன் பெயரன்கள் கொண்டீர்!
உள்ளமென் உணர்வில் தோய்ந்த,
உன்னத நட்பைக் கூறும்!
அள்ளக் குறையாத நட்பைப்பூண்டு,
அணைத்துநாம் மகிழ்ந்திருந்தோம்!

சொல்லவும் கேட்கவும் என்றும்,
சுகந்தரும் பக்கம் அவையே!
கள்ளமின்றிச் சிரித்துப் பேசி,
காலார நாம்நடப்ப துண்டு!
வள்ளலாம் இறைவன் தாமும்,
வரையின்றி யாவும் செய்வான்!
அள்ளக் குறையாத அன்பைச்சூடி,
அனுதினமும் மகிந்து வாழ்க!



**இனிய மனநாள் வாழ்த்துக்கள்!**

**கு.ப. அசோகன்,**
05-01-2023
(நண்பன் **ஜெயசங்கருடன்** இணைந்து)